www.kkkalvi.in

டிசம்பர் 2015–ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the month of December 2015)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை – 600 009

கடித எண். 12337/பக5(1)/2015–9, நாள் 23.12.2015

அனுப்புநர்
திருமதி த.சபிதா இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–08.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–01.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை மாநகராட்சி, சென்னை–3.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – 2012–13 ஆம் கல்வியாண்டில் 100 அரசு / நகராட்சி / மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது – புதிதாக தோற்றுவித்த 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு கோரி கருத்துரு அரசின்பரிசீலனையில் உள்ளது – டிசம்பர் 2015 மாதத்திற்கான சம்பளம் வழங்க அதிகார ஆணை (Pay authorization) – குறித்து.

பார்வை:
(1) அரசாணை (நிலை) எண்.137, பள்ளிக் கல்வி (மேநிக2) துறை, நாள் 08.06.2012.
(2) அரசாணை (1டி) எண்.57, பள்ளிக் கல்வி (பக5) துறை, நாள். 20.03.2014.
(3) அரசுக் கடித எண்.12337/பக5(1)/2015, நாள் 27.04.2015, 28.05.2015, 01.07.2015, 29.07.2015, 26.08.2015, 05.10.2015, 28.10.2015 மற்றும் 27.11.2015.
(4) பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 095269/எல்/இ3/2014, நாள். 09.12.2015.

******

பார்வை ஒன்றில் காணும் அரசாணையின்படி, 2012–13ம் கல்வியாண்டில் 100 அரசு/மாநகராட்சி/நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தியும், தரம் உயர்த்தப்பட்ட 100 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடமாக நிலை உயர்த்தியும், மேல்நிலைப் பள்ளிகளாக நிலை உயர்த்தப்பட்ட 100 பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் 9300–34800+4800 தரஊதியம் என்ற ஊதிய விகிதத்தின்கீழ் 9 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 900 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டும் ஆணைகள் வெளியிடப்பட்டது. இப்பணியிடங்களுக்கு பார்வை இரண்டில் காணும் அரசாணையின்படி கடைசியாக 01.01.2014 முதல் 31.12.2014 வரை தொடர் நீட்டிப்பு

Created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional

www.kkalvi.in



வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் 900 முதுகலை ஆசிரியர் பணியிடங்களுக்கு 01.01.2015 முதல் மேலும் ஐந்தாண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுப்பப்பட்டு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது.

3. மேற்காணும் 900 முதுகலை ஆசிரியர் தற்காலிக பணியிடத்திற்கு 01.01.2015 முதல் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கும் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு வரும் நிலையில், துறைத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் 01.01.2015 முதல் மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் பள்ளிக் கல்வி இயக்குநரால் ஊதிய ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் பார்வை மூன்றில் காணும் அரசுக் கடிதங்களின் மூலம் மேற்குறிப்பிட்ட 900 முதுகலை ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு, ஏப்ரல், மே, ஜுன், ஜுலை, ஆகஸ்டு, செப்டம்பர், அக்டோபர் மற்றும் நவம்பர் 2015 ஆகிய மாதங்களுக்கு ஊதியம் பெற அதிகார ஆணை அரசால் வழங்கப்பட்டுள்ளது. தற்போது டிசம்பர் 2015 ஆம் மாதத்திற்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழங்க அதிகார ஆணை (Pay authorization) வழங்குமாறு, பார்வை நான்கில் காணும் கடிதத்தின் மூலம் பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை வேண்டியுள்ளார்.

4. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், 900 முதுகலை ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் டிசம்பர் 2015 மாதத்திற்கான சம்பளப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு, சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

5. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண். 68293/Edn-II/2015, நாள்: 22.12.2015–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

23/12/15
அரசு முதன்மைச் செயலாளருக்காக

நகல்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
நிதி(கல்வி–II)துறை , சென்னை–9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

Created with nitroPDF professional
download the free trial online at nitropdf.com/professional